உ

சிவமயம்



ஈழத்தில் யாழ் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும்,
திருகோணமலை, தென்னமரவடி, காட்டுப்புலம், தொண்டைமானாறு
Worcester Park, Surrey UK ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் திரு சுப்பிரமணியம் வைரமுத்து** அவர்கள்

இறைவனடி அடைந்த

# நினைவு மலர்

20.06.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஆலமரமாய்த் திகழ்ந்து, எம்மையெல்லாம் அன்புடனும் பண்புடனும் வளர்த்து, நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தந்தை, சந்நிதி முருகனின் பக்தனாய், பண்புமிகு கணவராய், சகோதரனாய், மைத்துனராய், மாமனாய், பேரனாய், பூட்டனாய், நல் மனிதராய், நண்பனாய், அன்பு மிகு அறிவின் சுடர் ஒளியாய், எம் உள்ளமதில் குடிகொண்ட இனிய இதயமே இத்திருமலரை தங்கள் பாதக்கமலத்தில் பண்புடன் காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் ஆத்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

# அமரர் திரு சுப்பிரமணியம் வைரமுத்து



தாயின் மடியில்
**02.03.1923**

இறைவன் அடியில்
**21.05.2015**

## திதி வெண்பா

மன்மத வருஷ வைகாசித்திங்கள் - வளர்
பிறை (பூர்வ பட்ச) சதுர்த்தி திதியில் சுப்பிரமணியம்
வைரமுத்து அவர்கள் இப்பூவுலகம் நீங்கி
செல்வச்சந்நிதி முருகனின் பொற்பாதங்களை அடைந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோன்
 தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
 உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான்உனை நாட்பணிந்
 தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய
 பெம்மானிவ நன்றே

மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமல் ஐயாரடைகின்றபோது
காதன்மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றெனடியே னதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே

### நக்கீரர் அருளிய
## திருமுருகாற்றுப்படை

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகா னினைக்கின் லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மைபே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கழுந் தருளுவதினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துனகந்தாயைத்
தொண்டேன் விளம்புமா விளம்பே

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈறாறு தோள் போற்றி
காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

அருவரு முருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர் வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசல மமைந்த பெருமாளே

## பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோகமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## கந்தரலங்காரம்

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

சேந்தனைக் கந்தனைச் சங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோட னைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கியியே.

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவா
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
முருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களும்
குருவடி வாய்வற்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

செங்கே ழுடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைந்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினு மங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியம் வைரமுத்து விதானையார் (கிராமசேவகர் )

**இந்தப்பூமிக்கு ஜனனமும் மரணமும் புதிதல்ல. பிறப்பவர்கள் யாவரும் ஒருநாள் மரணத்தை அடைந்தேயாவார்கள். ஆனால் சில மனிதர்கள் மட்டும் தமது காலடித்தடங்களைப் பதித்துவிட்டு சென்றிருக்கின்றனர்.**

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்..... (குறள்)**

வல்வெட்டித்துறை அந்தக்காலத்தில் பாய்மரக்கப்பல்கள் கட்டும் துறை முக நகரம். எப்பவும் சுறுசுறுப்பான களையுடன் காணப்படும் நகரமாகவும் விளங்கியது. அங்கே தேக்கு, இலுப்பை, வேம்பு, பலா, போன்ற மரப்பலகைகளால் பாய் மரக் கப்பல்களை வடிவமைத்து செப்பனிடும் தொழிலில் கைதேர்ந்த ஆசாரிகளும் வாழ்ந்த நகரமாகும். இன்னும் சிறப்பு சிறந்த கப்பலோட்டிகள் வாழ்ந்தனர். பரம்பரை பரம்பரையாக குடிசார் ஒழுக்கத்தில் இந்த கப்பலோட்டிகள் உருவாகினர், பல்லாயிரம் வருடங்களாக தென் இந்தியாவின் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த மக்களுடன் மரபுவழிச் சம்பந்தம் கொண்டிருந்தனர் வல்வெட்டித்துறை மக்கள் .

கடல் வாணிபம் இவர்களது பிரதான தொழில். இவ்வாறான மரபுவழி கப்பலோட்டிகளில் ஒருவர்தான் தண்டேல் சுப்பிரமணியம். (தண்டேல் என்பவர் தான் ஒரு கப்பலை வழிநடத்தும் தலைமை மாலுமியாவர் Captain)தண்டேல் சுப்பிரமணியம் என்பவர் அன்னக்கண்டு என்பவரை வாழ்க்கைத் துணைவியாக மணம்முடித்து சீர்பெற வாழ்ந்து வந்தார்.இவர்களுக்கு மகனாக 1923ம் ஆண்டு பங்குனி மாதம் 2ம் திகதி அவதரித்தார் வைரமுத்து. கறுத்த உயர்ந்த தேகமும் உடைய இவர் பார்வைக்கு முரட்டுத்தனமானவராக தோன்றினாலும் பள்ளியில் ஒழுக்க சீலராகவும் விடயங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு கிரகித்து ஒப்புவிக்கத்தக்க நல்ல மாணவராகவும் இளமைக்காலத்தில் விளையாட்டில் வீரனாகவும் விளங்கினார்.

இளமையிலிருந்தே இவருக்கு ஒரு இராணுவ வீரனாக அல்லது போலிஸ் உத்தியோகஸ்தராக ஆகவேண்டும் என்ற விருப்பு இருந்தது. அந்தக்காலத்தில் இலங்கை முழுவதையும் பிரித்தானியர்கள் ஆண்டு வந்தனர். அதனால் ஆங்கிலத்தில் கல்வி கற்போருக்கு வேலைவாய்ப்பு சுலபமானதாக இருந்தது. வைரமுத்து அவர்களும் ஆங்கிலத்தில் கல்வி கற்றார்.

அவர் விரும்பியதுபோலவே அவருக்கு போலிஸ் பிரிவில் இரகசியப்பொலிசாராக உத்தியோகம் கிடைத்தது. நான்கு ஆண்டுகள் போலிஸ் பிரிவில் வேலை செய்தார். அனாலும் போலிஸ் உத்தியோகத்தில் ஏனோ மனசு தரிக்கவில்லை. அதனால் அந்த போலிஸ் புலனாய்வுப்பிரிவிலிருந்து (CID)விலகி நெல் வியாபாரத்தில் கவனம் செலுத்தினார்.
விவசாய விளைபொருட்களைத்தேடி இலங்கையின் வடக்கு கிழக்கு கரையோரக்கிராமங்களை நாடினார். இதனால் கொட்டியாரம் என அழைக்கப்பட்ட மூதூர் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் இவருக்கு ஈர்ப்பு ஏற்பட்டது. தானிய வகைகளைத் தேடித்திரிந்தவருக்கு விவசாயம் செய்வதில் விருப்பம் உண்டானது. ஆனாலும் நிலபுலங்கள் இல்லாததால் இவரது ஆசை திருமணமாகும் வரை தள்ளிப்போனது.

கொக்கிளாய் நீராடிய கதிரவனின் காந்தி கந்தசாமி மலைமுகட்டில் பட்டொளிர அந்த தென்னைமரவடிப் பிள்ளையார் கோவில் மணியோசை கலகலக்க, சலப்பை, சூரியன், சந்திரன் போன்ற சிற்றாறுகள் சலசலத்து ஓடிவந்து தண்ணீர் தர வரப்பு நிறைந்த வயலும், வயல்சார்ந்த நிலமுமாக எந்தக்காலத்திலும் பச்சைப்பசேலென காட்சியளிக்கும், மன்னவர் தென்னவர் மரபுவழி வந்த -தென்னர் மரபு அடியாம்- தென்னமரவடி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டத்தின் முடிவில் பறையன்ஆறு வந்து கொக்கிளாய்க்கடல்நீர் ஏரியில் கலக்குமிடத்தில் புல்மோட்டைக்கும் பதவியா மற்றும் பராக்கிரமபுரம் போன்ற குடியிருப்புக் களுக்கு மத்தியில் புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க கிராமமான தென்னமரவடி அமைந்துள்ளது. இது திருகோணமலை மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள கிராமமாகும்.

தென்னமரவடியில் உள்ளூர்த் தனவந்தரும் அப்போது விதானையாராக கடமையாற்றியவருமான சரவணமுத்து என்பவருடைய அறிமுகம் கிடைத்தது. அத்தோடு அவரது மகள் மீதும் ஈர்ப்பு ஏற்பட்டு நற்குடியில் பிறந்து நாற்குணங்கள் நிறைந்த சிதம்பரநாயகி என்பவரைத் தன் மனைவியாக்கி மாங்கல்யம் சூட்டினார். (1949) இந்தத் திருமணத்திற்கு வேண்டிய தாலி மற்றும் பொற்கலங்களை இவரது நண்பர் பருத்தித்துறை முருகேசுப்பத்தர் என்கின்ற குடும்பத்தின் ஆஸ்தான பொற்கொல்லர் வடிவமைத்துக்கொடுத்தார்.
விவசாயம் செய்வதில் ஆரம்பத்தில் ஆர்வமிகுதி மட்டுமே இருந்தது, விவசாயத்தில் அனுபவம் இருக்கவில்லை. அதனால் படிப்பினைகளை வைத்து படிக்கற்களாக்கி நடந்தார். அனுபவங்களே ஆசனாகியது. பாழடைந்த குளங்களைத் தூர்வெடுத்து அவற்றின் மூலம் நீர்பாச்சி நெடுவயல் நிறையக் கண்டார். கொம்பறை பருக்க அறுவடை கண்டார். நில புலங்களைச்சம்பாதித்தும் மக்களைப் பெற்றும் மனதார மகிழ்ச்சியோடு வாழ்ந்தார் .

நட்பு வட்டமும் பலமாக விரிந்து சென்றது. இவரைச் சுற்றி எப்பவும் நண்பர்கள் குழாம் துணைக்கு வரும். ஊருக்கு உதவிய இவருக்கு தலைவன் தகுதி தன்னாலே வந்தது. 1957 ஆம் ஆண்டு தென்னமரவடி கிராமத்தில் கிராமச்சங்கத் தலைவரானார். தனக்கு வந்த கிராமத்தலைவர் பதவியை பொறுப்புடன் மேற்கொண்டார். சீரிய சிந்தனையால் நல்ல பல திட்டங்களைப் போட்டார். கிரமத்தாரைக்கூட்டி சிரமதானங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை செய்யவைத்தும் அரச உதவிகளுக்கு அலுவலகங்களை தேடிப்போயும் ஊர் நலம்பெற உழைத்தார் . தன்னால் முடிந்த மட்டும் சேவைகள் செய்தார். ஊர் வளர்ச்சி கண்டுவர இவருக்கு மேலும் மேலும் பேரும் புகழும் சேர்ந்தது.

சரளமாக தமிழ் சிங்கள ஆங்கில மொழித்தேர்ச்சியும் தமிழ் முஸ்லிம், சிங்கள மூவின நட்பும் இருந்ததால் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிக் கிராமத்திற்கு 1963 இல் கிராமசேவையாளர் ஆனார். அந்தகாலத்தில் கிராம சேவையாளரை விதானையார் என்றுதான் கிராமத்தவர்கள் அழைப்பார்கள்.அரச நியமனமான அந்த கிராமசேவையாளர் உத்தியோகம் இவருக்கு பொருத்தமானதாக அமைந்தது. பேருக்கு உத்தியோகம் என்றில்லாமல் இவர் செய்த பெரும் சேவைக்கு சிறு ஊதியம் என்றாற்போல அமைந்தது.

1970ம் ஆண்டு மாற்றலாகி தென்னமரவடிக் கிராமத்துக்கு வந்தார். வசித்த வீட்டிலேயே அலுவலகம், கிடைத்த நேரத்தில் விவசாயம், என்றும் ஊருக்கும் சேவை செய்து தன் கருமத்திலும் கண்ணாக கால நேரம் பார்க்காது உழைத்தார் . வேட்டைத்துப்பாக்கி ஒன்றையும் இவர் வைத்திருந்தார். அதனால் தோட்டக்காவலுக்கும் வீட்டுச்சமயலுக்கும் உதவியாக இருந்தது. அடர்ந்த காட்டுக்குள் சென்று வேட்டையாடுவதிலும் விருப்பம் கொண்டிருந்தார் .

எனினும் மிருக வதையை இவர் பெரிதாக விரும்புவதில்லை. ஒரு தடவை தென்னமரவடியை சுற்றிய நீர்நிலைகளை அண்டி அசாத்திய மனித நடமாட்டத்தை உணர்ந்தார். ஏனிந்த மனிதர்கள் இங்கே நடமாடுகின்றனர்? அதுவும் சம்பந்த மில்லாத பொழுதில் இவர்களுக்கு இங்கே என்னதான் வேலை! முன்னாளில் இவர் வகித்த புலனாய்வு உத்தியோக அனுபவம் கைகொடுத்தது. துருவி ஆராய்ந்தார். வாவிகளில் வசிக்கும் முதலைகளைக் கொன்று அவற்றின் தோல் முதலிய பொருட்களைப் பதப்படுத்தி சில்லறைக்கு விற்கும் ஒரு பெரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தல் கூட்டத்தை கையும் களவுமாகப்பிடித்து பொலிசில் ஒப்படைத்தார் . இந்த நடவடிக்கையே இலங்கை வரலாற்றில் மிருக வதைக்கு எதிரான மிகப்பெரிய எதிர் நடவடிக்கையாக அன்று பேசப்பட்டது .

இதைவிட காட்டுமரங்களை வெட்டிக்கடத்தும் நடவடிக்கை களையும் வெகுவாகக் கண்டித்தார். ஒரு கிராம சேவையாளருக்கு இருக்கக்கூடிய வரையறைகளைக் கடந்தும் ஒரு பிராந்தியக்காவலனாக சமூக சேவகனாக வாழ்ந்து காட்டினார். மூவின மக்களும் தொட்டந் தொட்டமாக கிராமங் கொண்டு வாழ்ந்த திருகோணமலை மாவட்டத்தில் இவர் சந்தித்த சோதனைகளும் வேதனைகளும் ஏராளம். ஆயினும் சளைக்காத மனிதராக அனைத்தையும் உரியஉரிய விதங்களில் எதிர்கொண்டு சமாளித்தார்.

வெறுமனே இவர் குச்சவெளி மற்றும் தென்னமரவாடி ஆகிய கிராமங்களில் மட்டும் அறியப்பட்டவராக இல்லாமல் நாடறிந்தவராக வைரமுத்து விதானையார் திகழந்தார்.
கிராமத்தவர்களிடம் இருக்கக்கூடிய மூட நம்பிக்கைகளை அறிந்து அவர்களுக்கு பகுத்தறிவுச்சித்தனையை ஊட்டினார். இவர் விவசாயம் செய்வதிலும் பாரம்பரிய முறைகளில் உள்ள குறைபாடுகளை களைந்து சுய ஆராட்சி மூலம் தானும் நன்மையடைந்து தன்சார்ந்தோர்க்கும் இலாபமீட்டும் வழியை கற்றுக்கொடுத்தார். 1978ம் வருடம் கிராமசேவையாளர் பதவியை விட்டு ஓய்வுபெற்றுக்கொண்டாரெனினும் விதானையார் வைரமுத்து என்றே ஊரவர்கள் அறிந்தவர் தெரிந்தவர்களும் அழைத்து அன்பு பாராட்டினர்.

1970 இறுதியில் இலங்கை வரலாற்றில் தமிழ் சிங்கள இனங்களிடையே முரண்பாடுகள் உச்சக்கட்டத்தைத் தொட்டிருந்த வேளையில் இவரது உயிருக்கும் குறி வைக்கப்பட்டது. சமயோசிதமாக சமாளித்து 1982 ஆண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னமரவடிக்கிரமத்தை விட்டுப் பிரியாவிடைபெற்று தான் பிறந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு மனைவி பிள்ளைகளுடன் வந்து சேர்ந்தார்.

1982- 1995 தொண்டைமானாறு காட்டுப்புலம் என்ற இடத்தில் புது வீடுகட்டிக் குடி புகுந்தார். விடுதலைப்போரில் உள்ள நியாயப்பாட்டை உணர்ந்தாலும் ஆயுத மோதல்களுக் கிடையில் வாழப்பிடிக்காது போகவே இந்தியாவுக்குச் சென்றார். தென்னிந்தியாவில் திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்து வந்தவர்(1996- 2003 ) பின்னாளில் பிருத்தானியாவில் வாழ்ந்த அவரது புதல்வர்களுடன் சென்று வாழ்ந்தார். சந்தர்ப்பம் கிடைக்கும் போது தாயகம் செல்வதும் தான் விரும்பி வாழ்ந்த தென்னமரவடிக்கிராமத்தை சென்று பார்ப்பதுமாக இருந்தார். முடியுமானமட்டும் தன்னால் தனது பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் சிரமம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று அடிக்கடி சொல்லிக்கொள்பவர் முதுமைதான் என்றாலும் இன்னும் வாழ்வார் என்று எல்லோரும் எண்ணியிருக்க 21.5.2015 அன்று தனது 93 வயதில் இறைவனடி சேர்ந்தார்.

இறைவன் இவரை அழைத்தானா? இவர் இறைவனை அழைத்தாரா? சொர்க்கத்தின் வாசல் இவருக்காக திறந்திருக்கும் என்பதில் ஐயமில்லை!

கடமைகளில் தவறாமல் வாழ்ந்து முடித்தவர்களுக்கு பூவுலகிலும் பெயர் நிலைத்திருக்கும். சொர்க்கத்திலும் சிம்மாசனம் காத்திருக்கும்! தென்னமரவடி விதானையார் வைரமுத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த நல்லமனிதர் ஆவர்!

--- செங்கிரியான்----



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## It is an honour to say a few words about my loving father Late Mr Vaitamuthu Subramaniam

எனது தந்தையார் காலஞ்சென்ற திரு. சுப்பிரமணியம் வைரமுத்து 1923ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் பிறந்து இந்த வருடம் 2015ம் ஆண்டு லண்டனில் தனது 92 வது வயதில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் தனது வாழ்க்கைப் பயணத்தின் பெரும் பகுதியை எமது தாய் மண்ணில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தென்னமரவாடி என்ற சிறிய கிராமத்திலேயே வாழ்ந்தார். அங்கு கிராமத்தலைவராகவும், கிராம சேவையாளராகவும் நீண்ட காலம் இருந்தபடியால் "தென்னமரவாடி விதானையார்" என்று அன்பாக பெரும்பாலானவர்களினால் அழைக்கப்பட்டார். தென்னமரவாடியில் மட்டுமல்லாது திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பாலான வர்களுக்கு இவரை நன்கு தெரியும்.

இவர் விதானையாராக மட்டுமல்லாது திருகோணமலை மாவட்டத்திலேயே ஒரு பெரும் விவசாயியாகவும் இருந்தார். தென்னமரவாடியில எமது அம்மாவை திருமணம் செய்து தனது குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த காலங்களில் இவருக்கு விவசாயம் பற்றிய எந்த அறிவோ, பயிற்சியோ இல்லை. மண்வெட்டி கூட சரியாக பிடிக்கத்தெரியாமல் ஆரம்பித்த இவரது நெல் பயிரிடும் விவசாயம் மிகச் சிறிய காலத்துக்குள்ளேயே பெருவளர்ச்சி பெற்று இப்பகுதியில் ஒரு பெயர்போன விவசாயியாகவும் விளங்கினார். இவர் அக்காலத்துக்கேற்ற நவீன விவசாய உத்திகளைக் கைக்கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி மற்றவர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

இது தவிர எனது தந்தையாரிடம் பல திறமைகளும், நற்பண்புகளும் நிறையவே இருந்தன. உலக நடப்பு முதல் சோதிடம், சங்கீதம், அரசியல், விளையாட்டு போன்ற பல துறைகளில் நல்லறிவையும் தேர்ச்சியையும் பெற்றிருந்ததோடு பல நல்ல கருத்துக்களையும், முற்போக்கான எண்ணங்களையும் கொண்டிருந்தார்.


அவர் விதானையாராக இருந்த காலப்பகுதியில் ஒரு சிறந்த தலைவராகவும், தனது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெளிவாக மற்றவர்களுக்கு விளக்கி அவற்றை அமுல் படுத்துவதிலும் மிகவும் சிறப்பாக செயற்பட்டார். அந்த வகையில் அவர் பல நேரங்களிலும் பல்வேறு பட்டோரால் சூழப்பட்டு ஒரு சிறிய கூட்டத்தையே தன்னுடன் எப்போதும் கொண்டிருந்தார். இக்கால கட்டத்தில் இவரது பேச்சுக்கு மறுபேச்சு பேசவே பலரும் பின் நின்றார்கள்.

*தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசக் கூடிய வல்லமை பெற்றிருந்தமையால், திருகோணமலை மாவட்டத்தில் தமிழர், முஸ்லீம் சிங்கள மக்களுடன் சுபலமாகவும் நெருக்கமாகவும் பேசி தனது கடமைகளைச் சிறப்பாகச் செய்ததோடு அவர்களுடன் நட்பும் அன்னியோன்னியத்தையும் பேணி வந்தார்.

என்னைப் பொறுத்தவரை நான் எனது தந்தையாரிடம் இருந்து பெற்ற நல்ல பாடங்களை எனது வாழ்வில் இன்றும் பின்பற்றுகின்றேன். முக்கியமாக அவரின் கடின உழைப்பு! அவரால் சும்மா இருக்க முடியாது, ஏதாவது செய்ய வேண்டும். அதை விட அவரின் விடா முயற்சி, எதனையும் தன்னாலும் செய்யமுடியும் என்ற மனத்திடம் போன்றவை நான் கற்ற பாடங்களாகும்.

அவர் தன்னை நம்பியவர்களை எந்தக் கஸ்டமான சூழலிலும் கைவிட்டதில்லை, நன்றி மறந்ததில்லை. சில வேளைகளில் என்னுடம் பேசும்போது, தனக்கு பல வருடங்களுக்கு முன்னர் சுமார் 60, 70 வருடங்களுக்கு முன்னர் கூட உதவியவர் பலரை அன்புடன் நினைவு கூர்வார், இப்பண்பு என்னை மிகவும் நெகிழ வைத்துள்ளது. அது தவிர தனது கடைசி நிமிடங்கள் வரை எந்தவித சிக்கல்களும் இல்லாது இருந்த அவரது அபார ஞாபக சக்தி, சிந்தனைகள் மற்றும் தெய்வபக்தி என்னை பல தடவைகள் ஆச்சரியத்துக் குள்ளாக்கியுள்ளன.

**"தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று"**

என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய தனது 93 ஆண்டுகால வாழ்வை பலரும் வியக்கும் வண்ணம் வாழ்ந்த எனது தந்தையாரின் ஆத்மா "பிறந்த பிறப்பறுக்கும் எம்பெருமான்" இறைவனடி சேர, அந்த இறைவனையே வேண்டி நிற்கின்றேன்.

அன்பு மகன்
விஜயசிவாஜி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A few more words in English,

My father, late Mr Subramaniam Vairamuthu was born in Valvettiturai in the year 1923 well before the $2^{nd}$ World War and deported this world in 2015 at a ripe age of 93.

I can proudly say he had a full life, filled with excitement, adventure, and achievements and usual with ups and downs like anybody else. He was very steady and had sound mind memory, good thought until his very last days. That was truly great.

Though he was born and brought up in Valvettiturai, he spent most of his life in a small isolated village called Tennamaravadi in the Trincomalee district. This was due to marring my mother who hails from this village. Later he became the village headman and Grama Sevaka for Tennamaravadi and affectionately call by many as "தென்னமரவடி விதானையார்".

Before settling in Tennamaravadi, he had no knowledge or experience in forming or rice cultivating. His father or my grand father was a Captain of a sailing ship or called "தண்டயல்;". But within a short period he became a very popular rice farmer not only in Tennamaravadi but also in the entire Trincomalee district. This was a surprise to many traditional farmers in that area and some even became jealous of my father on his success.

As he was able to speak fluently in all three languages, Tamil தமிழ். சிங்களம் and English and his position as village headman and due to his success in rice farming he became well known in that area of Trincomalee and was a leader among all ethnic races Tamils, Muslims and Sinhalese.

He was extremely hardworking, never stays idle, full of self confident, lots of charisma and had never say die altitude elevated him into a high respected person.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To me, over the many years I found him never let anyone down who trusted him. I was amazed many times how he would recall some of those who helped him even at his very early years with lots fondness, love and affection. He has been extremely greatful to all of them even though many of them were no longer alive. His memory was amazing as well, among many other things.

He had a good knowledge and understood of world affairs, current political topics, music, astrology, religion, sport and so on, that I can keep on mentioning. On some subjects he had strong interest and had deep knowledge and he continued until his departure.

Though his sudden and quite departure had sudden of all of us, we are proud the way he had lived his life brought us up and inspired lots of others and us in many ways. I am sure his soul will rest in peace at the feet of the Almighty as he always wanted and prayed for.

May I on behalf of our family take this opportunity to thank all of you here today and also those who were unable to attend my father's farewell today but helped us in many ways during this hard and sad time overcoming the sorrow. A big and sincere thank you. I think it is a wonderful farewell to my father. This man or part of the man we all knew is no longer amongst us, but he will never be gone until all of us have passed. May his soul rest in peace.

Loving Son
Vijayasivaji


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் புலம்பல்

அன்பின் தந்தையே
ஆருயிர் ஐயாவே
ஆற்ற முடியவில்லை - இந்த
முடிவற்ற சோகத்தை

நேர்ந்து விட்டதே இந்த
இயற்கையின் நியதி என்று
தேற்றவும் முடியவில்லை
தேம்பி அழுகின்றொம் - ஐயா
நொந்து தவிக்கின்றோம்

தாயை முன்னிழந்தோம்
தயவோடு அணைத்தீர்கள் - எம்மை
உங்களையும் பறிகொடுத்துப்
பரிதவித்து நிற்கின்றோம் - ஐயா
யாரிடம் சொல்வோம்?
யாரைத்தான் நோவோம்?

அடி நெஞ்சைக் குடைகின்ற — வேதனை
அழுதாலும் தீருதில்லை
தனித்து விட்டோம் - ஐயா நாங்கள்
தவித்துத் துடிக்கின்றோம்
துயர் துடைக்க யாரெமெக்கு
இந்தப் பாரினிலே இனி வருவார்?

அவையத்தே முந்தியிருக்கச்
செய்தீர்கள் ஐயா எங்களைக்
கற்றோரும் மற்றோரும்
மதிக்கும்படி பேணி வளர்த்தீர்கள்
அன்பிற்குக் தந்தையாய்
அறிவுக்கு ஆசானாய்
பண்போடு வளர்த்தீர்கள்
பெற்றுவிட்ட நன்றிக்கடனை
எப்பிறப்பில் தீர்ப்போம் ஐயா
போற்றுதற்கரிய எங்கள் பிதாவே
ஐயா. நீங்கள் எங்களின் தெய்வம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம் பிக்கையில்
தளராத உறுதியில்
விடாமுயற்சியில்
நிகரற்றவர் நீங்கள் ஐயா
கடின உழைப்பாளி
திடமான பேச்சு
திடகாத்திர தோற்றம்
ஆற்றலும்
ஆளுமையும்
எதையும் சாதிக்கும்
துணிச்சலும்
உங்களின் தனித்துவம்!

"வலிநன் வாழ்வான்"
என்ற தத்துவ முத்தாக வாழ்ந்த
வைர நெஞ்சுரம் கொண்டவர்
நீங்கள் ஐயா

வாழ்க்கையின் எங்கள்
வழிகாட்டி — நீங்கள் ஐயா
ஒளியேற்றிச் சென்று விட்டீர்கள்
உங்கள் ஆசியோடு
ஒளிரும் எம் வாழ்க்கை இனி
உங்கள் ஆத்மா
ஒய்வு பெறட்டும் தந்தையே
சுவர்க்கத்தில் நல்வாழ்வு பெறுவீர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகனின் ஆதங்கம்

ஐயா,
பாரினிலே பிறந்து பலகலைகளை கற்று
சகலகலாவல்லவனாக ஊரே
புகழ்பாட வாழ்ந்தீர்கள் ஐயா
இடர்வந்த போதெல்லாம் வீரனாய்
வாழ்ந்தீர்கள் ஐயா
அன்புக்கு அன்பாய் அறிவுக்கு ஆசானாய்
பார்புகழ் போற்ற வாழ்ந்த காலத்தில்
என் பிள்ளைகள் பெயர் புகழ் பாடி
உலருக்கு தெரிவித்தீர்கள் ஐயா
நான் பிறந்தது தொடக்கம் என்னை
உங்கள் தோளில் தூக்கி கையில் பிடித்து
நடக்க வைத்து அறிவை ஊட்டி
விவசாயத்தைப் பயிற்றுவித்து என்னை இன்று
ஒரு முழு விவசாயியாக பெருமையுடன் வாழ
வைத்து இருக்கிறீர்கள்
ஐயா
நீங்கள் வாழ்ந்த மண்ணையும் நான் பிறந்த
மண்ணையும் என்றும் நேசிப்பேன் ஐயா

இன்று உங்கள் புகழ் பாடியவர்கள்
நாளை என் புகழ் பாட நடப்பேன் ஐயா
என்றும் உங்கள் ஆசிர்வாதம் கிடைக்கவும்
உங்கள் ஆத்மா சாந்திக்காகவும்
இறைவனை வேண்டும்

மகன்
(ராசு) விஜயநாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி புலம்பல்

நான்கு இலக்குமிகள் நாங்கள்
நடுவே ஓர் ஆணாகப்
பிறந்தீர்கள் அண்ணா!
அறிவில் சிறந்தோனாய்
அற்றல் மிக்கவனாய்
ஆளுமையில் உயர்ந்தவனாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
வாழ்ந்தீர்கள் அண்ணா

செல்வச் செழிப்பும்
செல்வாக்கும்
சென்ற இடமெல்லாம்
சிறப்புக்களும்
வாய்க்கப் பெற்றவர்
எங்கள் அண்ணா என்று
வாயாரப் புகழ்ந்தோமே அண்ணா

நாட்டுக்கு நாடு
உல்லாசமாய் வலம் வந்தீர்கள்
வயோதிப வயது உங்களை
முடக்கியதில்லை
அடிக்கடி வந்தெம்மை
பார்த்துச் சென்றீர்கள் அண்ணா
இனி யாரெம்மைத் தேடி வருவாரோ?
அண்ணா! தள்ளாத வயதெனினும்,
தவிக்கின்றோம் தாளவில்லை
உங்களைப் பிரிந்த துயர்

ஆணிவேர் அறுந்து விட்டதென்று
அழுது புலம்புகின்றோம் அண்ணா.
அடுத்த பிறவியுண்டெனில்
ஒரு தாயின் வயிற்றிலே
பிறக்கும் பேறு பெற்று வருவோம்
அண்ணா
சாந்தி பெறுங்கள்

அன்புச்சகோதரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

தாய்க்கு ஒரு தமையன்
நீங்கள்
எங்கள் அன்பிற்குத் தனியொரு
தாய்மாமன் நீங்கள்

அகவை தொண்ணூற்றி யிரண்டு
கடந்தும்
திடகாத்திரம் மிகப்பெற்று
தென்பொடு வாழ்ந்தீர்கள்
கண்ணூறு பட்டுவிடும்
தடியூன்றி நடக்க இல்லை
தள்ளாடி விழவுமில்லை
தள்ளாத வயதென்று
யாரும் சொல்லவில்லை
தன்னம்பிக்கை
தளராத உறுதி
தற்துணிவு, சற்றேனும் குறையவில்லை
ஆதலால்
வாலிப வயோதிபனாய்
வலம் வந்தீர்கள்
உவகை கொண்டோம்
உங்கள் கம்பீரம் கண்டு

தென்னமரவடி விதானையார்
அங்கு செய்த சேவையோ பெரிது
காடுவெட்டிக் கழனியாக்கி
பாடுபட்டு வியர்வை சிந்தி
தேடிய செல்வத்தில் சீமானாய்
சீரோடு வாழ்ந்தீர்கள்

காட்டுப் புலத்திலே
நீங்கள் கட்டிய மனை அது
பூந்தோட்டம் சூழ்ந்திடும்
அழகிய மாடம்
அமைதியும் ஆனந்தமும்
அங்கு நிலைத்திட
நிறைவான வாழ்க்கை வாழ்ந்தீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுப் புலம் தாத்தா
வீடெனில்
நாட்டம் கொள்வர்
எங்கள் பிள்ளைகளும்
அன்னிய தேசத்தின்
முடங்கிய வாழ்க்கையும்
கொடிய குளிரின்
கோரத்தனமும்
வாட்டி வதைக்கா விட்டிருந்தால்
நீண்டிருக்கும் உங்கள்
ஆயுள் இன்னும்!
ஆற்றாமையால் அழுகின்றோம்
மாமா...
மலை சாய்ந்து போனதென்று
மனம் வாடித் தவிக்கின்றோம்

## பேத்தி புலம்பல்

அம்மப்பா அம்மப்பா - இனி
ஆசையாய் யாரைக் கூப்பிடுவோம் - இப்படி
இயல் இசை நாடகம் ரசிப்பீர்கள்
ஈன்ற எம்பெற்றோரை விட
உங்கள் உறவினர் எல்லோருக்கும்
ஊர் மெச்சும்படி புகழ்வீர்களே.
என் நடனத்தையும் ஆரபியின் வயலின் இசையையும்
ஏன் இன்னும் சிறிது காலம் வாழ்ந்து எம் அம்மா
ஐயா ஐயா என்று கூப்பிடும் ஒலியை நிறுத்தினீர்கள்
ஒவ்வொரு நாளும்
ஓ என்று அழும் எம் அம்மாவை விட
ஔவையார் கதைபல சொல்லும் அம்மப்பா - இனி
எப்பொழுது உங்களை காண்போம்

பேத்தி வ.அபிநயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**In my opinion, greatness cannot be defined by a man. A man is defined by greatness.**

My Ammappa is one of the greatest people I know and most likely would ever know. I may not have been alive for even 1/2 his life but from the stories he has told me before I went to bed, I knew that he was someone I will always look up to.

His drive, work ethic and selflessness are all qualities I truly admire. There are many memories Ammappa and I have shared. One of my favourite memories has got to be walking home after school as I sing random songs and he'd clap along but most obviously stopping at the Co-op to buy chocolate; one for me and one for him. Sweets were his guilty pleasure. Another memory that I don't recall but Ammappa always mentioned was how when we went to India, when I was less than a year old, I would climb out my Amma's arm and climb into Ammappa's bed in the midst of the night.

அம்மப்பா எல்லோருக்கும் சாத்திரம் நல்லாய்ச் சொல்லுவார். இன்று படிப்பறிவு இல்லாத எமன் இந்த சாத்திரப்புத்தகத்தை கிழித்து எறிந்து விட்டான்.

The amount of support I have received from Ammappa throughout my 14 years have been truly amazing. I can't recall a function or event of mine in which he wasn't there. He was always there cheering me on and when the day was over he'd scold me saying that I looked horrible and needed a bath.

Basically, my Ammappa will be missed a great deal and I hope one day I become half the person he was. You will never find anyone like him. He was one of a kind.

Albert Einstein once said, ' Our death is not an end if we can live on in our children and the younger generation for they are us. Our bodies are only wilted leaved on the tree of life.'

So let's celebrate Ammappa's life and continue his legacy for I will always hold a part of you. I love you and will miss you forever and always.

Loving Granddaughter
**V. Aarabhi**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A Father to my DAD

A father to my dad, but a loving grandfather to me, he was a man of wisdom and knowledge, even thinking now, I say to myself I was blessed to be in his presence during the last stages of his life.

I always had a different kind of respect for him, not due to his position of being my grandfather, but because of the way he treated me.Even though I had not spent a lot of time with him, each and every second I shall cherish throughout my life, from advice to motivation, he gave me guidance in the right way.

It's an honour to say that I am his grandchild, and I shall live with the honour of telling people of how mighty of a man he was, living to an age of 92 which is something that we all dream of but not many of us live. God blessed his humble soul and gave him a long wonderful life.

Even though he has departed from us, he will always remain with us in our hearts, a pure soul he has, and like a dove he has left us so elegantly, his passing was very peaceful and it's how he would have wanted to depart. As many would say, a loved one never dies but lives on within the hearts of those who love them back. Right now, he is watching down on us from heaven and I just want him to know, Appappa we love you. Your legacy will live on and never be forgotten.

Written by Prakavi Vijayarajah, grand daughter


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Warrior of a Granddad

He was a true warrior, he fought and won many battles in his life but we will never face such battles in our life. He has given his children, grandchildren and great-children love, support and guidance and has now gone to Heaven, and from where he will watch us to see how we progress. In his earlier years, he looked after his 4 sisters and successfully got them all married and managed to keep them all happy; despite the sweat and tears he shed in order for this to happen. He was then rewarded by God with the love of his life, my Appama, for his hard work. He was then blessed with 5 amazing children, including my beloved father, who he brought up with tender love and care. He ran into difficulties with raising them but being the strong, brave man he was, he managed to overcome then. Over the years he became a village leader, got a lot of love and respect and saw each and every one of his offspring marry, move abroad and start their own families. He lived long enough to see 12 of his great - grandchildren.

Dearest Grandchild
**V. Sharani**

Appappa is in a better place now. I will always remember you as a loving grandad. I miss you.

***Written by Kaviya Vijayarajah,***
***Grand Daughter***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி அஞ்சலியின் போது பூட்டியின் உள்ளத்தில் இருந்து...

இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் என் வணக்கங்களும் நன்றிகளும்...

திரு சுப்பிரமணியம் வைரமுத்து அவர்கள் என் அப்பா ஜெகன்மோகனின் அப்பா விஜயகுமாரின் அப்பா. அதனால் நான் அவரை அப்பபபப்பா என்று கூப்பிடுவேன். அவர் அதை ரசித்து சிரிப்பார்.

நாம் பிறக்கும் அன்றே இறக்கும் தேதியும் குறிக்கப்படும். அந்த இடைப்பட்ட காலத்தில் ஒருவர் வாழும் வாழ்வில் தான் அவர் சிறப்பு உள்ளது. அந்த வகையில் அப்பப்பா சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தார். 5 பிள்ளைகள் 14 பேரப்பிள்ளைகள் 12 பூட்டப்பிள்ளைகள். அவர் வாழ்நாளில் அவருக்கு கிடைத்த பேரும் புகழும் அளவில்லாதது. தமிழர் சிங்களவர் என்ற பேதம் இல்லாமல் அனைவரும் மரியாதையுடன் நடத்திய ஒரு வீரர். ஏழை எளியவருக்கும் தன்னைத் தேடி வருபவருக்கும் உதவி செய்வதில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டவர்.

எனக்கு பழங்கதைகள் சொல்லி பல விஷயங்களை தெரியத்தருவார். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு வரலாறு அவர்.

அவர் விட்டுச் சென்ற எச்சங்களில் நானும் ஒருத்தி என்பதில் பெருமை அடைகிறேன். அவர் பெயரையும் புகழையும் காத்து நடப்பேன் எனக் கூறி.. அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

நன்றி.

பூட்டி
மயூரி ஜெகன்மோகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பாசத்தின் உறைவிடமாய் ஒளிவீசிய எங்கள் தெய்வம் அமரர் திரு சுப்பிரமணியம் வைரமுத்து அவர்களின் மறைவு செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் மலர் வளையங்கள், மாலைகள் சமர்ப்பித்தும் அஞ்சலி செலுத்தியோருக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து அனுதாப அட்டைகள் தொலைபேசி என்பவற்றின் மூலம் ஆறுதல் கூறியும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் 31ம் நாள் அந்தியேட்டி, சபிண்டிகரண நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், நிகழ்வில் கலந்து கொண்ட ஆலய குருமார்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

குடும்பத்தினர்கள்.

## Thank You

We would like to sincerely thank all of our relatives and friends who went out of their way to help us in numerous ways and also sharing in our grief and sorrow over this month. We would like to express our appreciation for all the messages of condolence and floral tributes we have received, and the many comforting words.

**Family.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print-London, www.jrprint.com T : 0208 503 6643